**<u>கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 208/2022**

**வா.சா.1 –  கார்த்திக்பாண்டி**

**<u>02–07–2026  சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில்  குறுக்கு விசாரணை</u>**

1. நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விபரம் நான் சொல்லிதான் தயாரிக்கப்பட்டது. நான் சூசியாபுரம் மேற்கு திருப்பூரில் 12 வருடங்களாக குடியிருக்கிறேன். தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு 107/1 வளர்மதி இல்லம் என்ற முகவரியில் குடியிருந்தேன். 12 ஆண்டுகளாக  பிரமாணவாக்குமூலத்தில் உள்ள முகவரியில் குடியிருந்து வருவதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் 2022 ல் கிரையம் பெற்ற சாந்தாமணி மற்றும் சரண்யா ஆகியோர்களுக்கும், பிரதிவாதி ராணிக்கும் என்ன தொடர்பு என்றால் தெரியாது.

2. கிரையம் வாங்குவதந்கு முன்பு மூல ஆவணங்களை பார்த்துதான் கிரையம் பெற்றேன். என்ன மூல ஆவணத்தை பார்த்தேன் என்றால் சரண்யாவின் கிரையப்பத்திரத்தை பார்த்தேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் சரண்யாவின் கிரையப்பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியவில்லை. நான் சொல்வதுபோல் சரண்யா பெயரில் கிரையப்பத்திரம் இல்லை என்றும், நான் வழக்கிற்காக அதனை பார்த்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. நான் பார்த்ததாக சொல்லும் பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் சரண்யா மற்றும் ரமேஷ் பெயரில் இருந்தது, அதன்பிறகு நான் எனது பெயரில் மாற்றிக்கொண்டேன். சரண்யா மற்றும் ரமேஷ் பெயரில் இருந்த பட்டாவை

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை என்னுடையதை தாக்கல் செய்துள்ளேன். 01.07.2021ம் தேதியன்று யார் இடையூறு செய்தார்கள் என்றால் நான் கட்டிடம் கட்ட ஆரம்பித்தபோது பிரதிவாதி இடையூறு செய்தார். உடன் யாரேனும் வந்தார்களா என்றால் பிரதிவாதி மற்றும் இருவர் வந்தார்கள். என்ன கூறி தடுத்தார்கள் என்றால் அது அவர்களது இடம் என்று கூறினார்கள்.

4. அவர்களது இடமா என்று எனக்கு விற்றவர்களிடம் கேட்டேனா என்றால் கேட்டேன் அவர்களுக்கும் இடத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று தெரிந்துகொண்டேன். இது சம்பந்தமாக பிரதிவாதி அ.வ. 405/2022 வழக்கை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அவ்வழக்கு 2025 மார்ச் மாதம் தள்ளுபடியாகிவிட்டது. அவ்வழக்கின் வாதுரையை படித்துப்பார்த்து அதன் சங்கதிகளையும் பரிகாரத்தையும் தெரிந்துகொண்டேனா என்றால் அது அவர்கள் இடம் என்றும் அதற்குள் நான் வரக்கூடாது என்றும் போட்டிருந்தார்கள்.

5. நான் சொல்வதுபோல் அ.வ 405/2022ல் சொல்லப்படவில்லை என்றும். அ.வ. எண். 306/2006ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் அடிப்படையில் நி.ம. எண். 27/2007 மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் நி.ம எண். 7/2014 மூலம் சுவாதீனம் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி நீதிமன்றம் மூலம் சுவாதீனம் பெற்று அவர்கள் சுவாதீனத்தில் இருந்து வருவதால் 2022ம் ஆண்டு நான் கிரையம் பெற்று சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து அமைந்துள்ள இடம் ஹரிஜன காலனி என்றால் சரிதான். அரசு வழங்கிய பட்டாவின் அடிப்படையில் தான் அங்கு அனைவரும் குடியுள்ளார்கள் என்றால் சரிதான்.

6. சரண்யாவின் தாத்தா பெயரில் தான் அரசால் முதல் முதலில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. சரண்யாவின் அப்பாவும், பிரதிவாதி ராணியும் உடன் பிறந்தவர்கள் என்றால் அவ்வாறு தான் வழக்கு தாக்கல் செய்தபோது தெரிந்து கொண்டேன். அதன் பிறகாவது சொத்தில் ராணிக்கும் பங்கு இருப்பதாக சொல்வது குறித்து எனக்கு விற்றவரிடம் கேட்டேனா என்றால் ராணியின் பங்கை கொடுத்துவிட்டதாக சொன்னார்கள். எனது கிரையப்பத்திரத்தில் சின்னக்குட்டிக்கு சொத்து பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. சின்னக்குட்டி சாரதாமணியின் மாமனார் மற்றும் சரண்யாவின் தாதா என்றால் சரிதான். ராணிக்கு பங்கு பிரித்து கொடுத்தது குறித்து எனது கிரையப்பத்திரத்தில் சரத்துக்கள் இல்லை என்றால் சரிதான். எனது கிரையப்பத்திரத்தில் சின்னக்குட்டிக்கு என்கிற அழகப்பன் என்பவருக்கு H.S.D பட்டா எண். 176/2006 ன் படி பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த H.S.D பட்டா என்வசம் உள்ளதா என்றால் ஜராக்ஸ் கொடுத்தார்கள். அந்த அசல் H.S.D. பட்டாவை அவரது மகளான பிரதிவாதியிடம் ஒப்படைத்ததன் அடிப்படையில் பிரதிவாதி ராணி வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றம் மூலம் சுவாதீனம் பெற்றுள்ளார் என்றால் தெரியாது.

8. பிரதிவாதி தாவா சொத்தில் குடியிருக்காமல் வேறு இடத்தில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். அவர் வேறு இடத்தில் இருப்பதை சாந்தமாணியும், சாரதாவும் அவர்களுக்கு சாதகமாக பயன்படுத்தி ராணிக்கு தெரியாமல் என்னை ஏமாற்றி சொத்தை விற்றுள்ளார்கள் என்றால் தெரியாது. நான் பொய்யாக கிரையம் பெற்ற ராணி பெயரில் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மை நிலவரம் தெரிந்திருந்தால் விளம்புகை பரிகாரம் கோரியிருப்பேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த

பிறகு தான் சொத்தில் கட்டிடம் கட்ட ஆரம்பித்தேன் என்றால் சரியல்ல. கட்டிடம் கட்டியபோது பிரச்சினை செய்ததால் தான் வழக்கு தாக்கல் செய்தேன்.

9. நான் எனது பிரமாணவாக்குமூலத்தில் கட்டிடம் கட்ட எண்ணியபோதே ராணி தடுத்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் கட்டிடம் கட்ட சுத்தம் செய்தபோதே ராணி பிரச்சினை செய்தார். ஆகையால் நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்துவிட்டு நான் கட்டிடம் கட்டினேன் என்றும், காவல் துறையை பிரதிவாதி நாடியபோது சிவில் வழக்கு நிலுவையில் இருந்த காரணத்தினால் நடவடிக்கை எடுக்க முடியாது என்று கூறிவிட்டார்கள் என்றால் பட்டாவை சரிபார்த்துதான் கட்டிடம் கட்டினேன். ராணியின் இடம் தாவா சொத்திற்கு அருகே உள்ளது ராணி தாவா சொத்து தான் அவர் இடம் என்று பிரச்சினைசெய்கிறார். தாவா சொத்து அருகே ராணிக்கு 2 3/4 செண்ட் இடம் உள்ளது. அது எனது இடத்தை தொட்டார்போல் இல்லை.

10. மேற்படி விபரத்தை இவ்வழக்கிலோ ராணி தாக்கல் செய்த வழக்கிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. தாவா சொத்து தான் ராணி இடம் என்றும், நான் சொல்வதுபோல் வேறு இடமே இல்லை என்றும், நான் தான் அராஜகமாக கட்டிடம் கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. ராணியின் டி.எஸ் எண்ணும் எனது டி.எஸ் எண்ணும் வெவ்வேறு . தாவா இடம் ராணியுடைய இடம் என்று தெரிந்தே நான் சரண்யா சாரதாமணியுடன் கூட்டு சேர்ந்து அராஜகமாக கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு அழகப்பனைத் தவிர வேறு யாருக்கும் பட்டா வழங்க்கப்படவில்லை என்பதால் தாவா சொத்தின் அருகே ராணிக்கு வேறு இடம் உள்ளதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தது அல்ல என்றால் சரியல்ல. விளம்புகை பரிகாரம் கோராமல் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.07.02 16:54:17 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.